

₹100/-
ஞானகுரு
மகிழ்ச்சி
4 - 2
மாசி 2025
எஸ்.கே.முருகன்
அம்மாவும்
பொய்
சொல்வாங்க...

# ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639




க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.




ஆசிரியர் பக்கம்

# தனிமை என்பது சுதந்திரமல்ல, சிறை.



‘நான் யாரையும் தொந்தரவு செய்வதில்லை, என்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம். நான் உண்டு, என் செல்போன் உண்டு. அது போதும் எனக்கு’ என்று வீட்டுக்குள்ளும் தனிமை தேடும் ஒரு புதிய தலைமுறை உருவாகியிருக்கிறது.

பெற்றோர், ஆசிரியர், முதியவர், உறவினர் என யாரையும் எதற்காகவும் இவர்கள் மதிப்பதில்லை. நான் எதற்கு மதிக்க வேண்டும் என்ற கேள்வியை சுலபமாகக் கேட்கிறார்கள். அதற்கு பதில் சொல்வதற்குப் பெற்றோருக்குத் தெரிவதில்லை. பதில் சொன்னாலும் கேட்கும் மனநிலையில் இந்த தலைமுறை இல்லை.

ஒரு பிள்ளை அல்லது இரண்டு பிள்ளைகள் உள்ள வீடுகள் என்பதால், ‘நான் பட்ட கஷ்டத்தை என் பிள்ளை படக்கூடாது’ என்ற எண்ணம் பெற்றோர்களிடம் இருக்கிறது. அதனால் பிள்ளைகளுக்கு கேட்பதெல்லாம் கிடைத்துவிடுகிறது. யாருக்கும் எதையும் பகிர்ந்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் சுயநலத்துடன் வளர்கிறார்கள்.

சுலப வேலைக்கு அதிக சம்பளம் எதிர்பார்க்கிறார்கள். வித்தியாசமான உணவுகள், விலை உயர்ந்த வாகனம் அதிக விருப்பமாக இருக்கிறது. குடிப்பதும், அதிவேகத்தில் வண்டியோட்டுவதும் தவறு இல்லை என்றே நினைக்கிறார்கள். ரத்தம் தெறிக்கும் பப்ஜி விளையாட்டுகளும், மாஸ் சண்டை படங்களும் விருப்பமாக இருக்கிறது. எதிர்காலம் பற்றிய அச்சம் இல்லை.

இவர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்..?

இது தலைமுறைக்கான இடைவெளி என்று அசட்டையாக இருக்காதீர்கள். குழப்பமான புதிய ஒரு சமூகத்திற்கான அறிகுறி. இதை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். தனிமனித சுதந்திரம், திறமை முக்கியம் என்றாலும் சக மனிதர்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை, ஒருவரையொருவர் சார்ந்தே வாழ வேண்டும் என்று சொல்லிக்கொடுங்கள்.

தேவையான நேரத்தில் கண்டிப்பு காட்டுங்கள். எச்சரிக்கை செய்யுங்கள். தோல்வி, ஏமாற்றத்திற்குப் பழக்குங்கள். சட்டத்தை மதிப்பதற்கு சொல்லிக்கொடுங்கள். பிள்ளைகள் மாறினால் மகிழ்ச்சி. மாறாவிட்டாலும் நீங்கள் கடமையை செய்த மகிழ்ச்சியில் இருங்கள்.

ஆசிரியர்

www.gyaanaguru.com

# பெண்ணுக்கு ஆண் உடல் தேவையில்லை



ரொம்பவே சலிப்புடன் ஞானகுருவை சந்திக்க வந்தார் மகேந்திரன். “கல்யாணம் முடிச்சு 20 வருஷமாச்சு. இன்னமும் பொண்டாட்டி கூட சண்டை வந்துக்கிட்டே இருக்கு. வீட்டுக்குப் போகவே பிடிக்கலை. அவளை ஆசையா நெருங்க நினைச்சாலே பயமா இருக்கு. ஆனா, அவ மட்டும் எல்லா நேரமும் சந்தோஷமா இருக்கா… அது எப்படின்னு தெரியலை..?” என்று கேட்டார்.

“அவர் உன்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை, அவராகவே மகிழ்ச்சி அடையும் வழிகளை கண்டுபிடித்துவிட்டார் என்று அர்த்தம்” என்றார் ஞானகுரு.

“அது எப்படி..? ஆண் மகிழ்ச்சியாக இருந்தால் தானே பெண்ணும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்?”

“அப்படி யார் சொன்னது..? இந்த உலகில் ஆண்களை விட பெண்களே அதிக காலம் வாழ்கிறார்கள். ஆண்களின் ஆயுட்காலத்தை விட பெண்ணின் ஆயுட்காலம் கிட்டத்தட்ட 6 வருடங்கள் அதிகம் என்பது அறிவியல்பூர்வ உண்மை. இது எப்படி சாத்தியம் என்றால் அவர்கள் எல்லா

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

# மந்திரச்சொல்

உயரத்திற்கு
சென்ற
பிறகே,
கீழேயிருந்த
பள்ளத்தின்
அழகு
தெரியும்.



சிக்கலுக்கு இடையிலும் சந்தோஷம் அடைகிறார்கள் என்பது தான். எல்லா விஷயங்களிலும் பெண் சந்தோஷம் அடைகிறாள்.

ஆனால், ஆண்களுக்கு மூன்று விஷயங்களில் மட்டுமே அதிக மகிழ்ச்சி அடைக்கிறது. நல்ல உணவு, பாலியல் இன்பம். கேளிக்கை ஆகிய மூன்றுக்காக மட்டுமே உயிர் வாழ்கிறான் என்றே சொல்லலாம். இந்த மூன்றில் ஒன்று இல்லை என்றாலும் தன்னுடைய வாழ்க்கையை குற்றம் சொல்லி சோக கீதம் பாடுவான். பாலியல் இன்பம் என்பது அவனுடைய ஆசையை மட்டுமே நிறைவேற்றுவது ஆகும். பெண்ணின் ஆசையை நிறைவேற்றும் அக்கறையும் அன்பும் ஆணின் இயல்பிலேயே கிடையாது. அதனால் தான் பாலியல் வேட்டை முடிந்ததும் தூங்கிப் போகிறான். ஆணின் கூடல் முடிந்ததும் எந்தப் பெண்ணும் உடனடியாக தூங்குவதில்லை. அவளால் தூங்க முடியாது. அதனால் தூங்கும் கணவனைப் பார்த்து தன் ஆசையை தணித்துக் கொள்கிறாள்...”

“அதெப்படி..?”

”காலகாலமாக பெண்கள் பாலியல் ஆசையை அப்படித்தான் தீர்த்துக்கொள்கிறார்கள். பெண்ணின் பாலியல் ஆசையை, ஆர்வத்தை ஆண்களால் தீர்த்துவைக்க முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே படுக்கை அறை குறித்து பெரிதாக பெண்கள் கனவு காண்பது இல்லை. எத்தனை கனவு கண்டாலும், ஆசைப் பட்டாலும் ஏமாற்றமே கிடைக்கும் என்பதால் தனிமையில் இன்பம் அடைந்துகொள்கிறார்கள்.

அதேநேரம், தன் உடலை ஆண் பயன்படுத்திக் கொள்வதில் பெரும் திருப்தி அடைகிறாள். கணவனுக்குக் காத்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறாள். கணவனுக்கு நன்றாக சமைத்துப் போடுவதில் மகிழ்ச்சி அடைகிறாள். இன்னும் சொல்லப்போனால் கணவனுடன் சண்டை போடுவதிலும் அவள் மகிழ்ச்சி அடைக்கிறாள். அவனுடைய குழந்தைகளை அவனை விட சிறப்பாக வளர்ப்பதில் மகிழ்ச்சி அடைகிறாள்.

ஆண்கள் உடல் வழியே பார்க்கும் பாலியல் இன்பத்தை பெண் உணர்வு வழியே பார்க்கிறாள். அதனால் தான் இன்னமும் குடும்பம் என்ற அமைப்பு நிலைத்து நிற்கிறது. அதாவது பெண்ணின் காம ஆசை வெறும் கலவியில் இல்லை என்ற உண்மை எல்லாம் ஆண்களுக்குப் புரிவதே இல்லை. குடும்பம் என்ற அமைப்பு, உணவு, உறக்கம், கேளிக்கை வேண்டும் என்றால் பெண்ணின் அடிமையாக வீட்டில் இரு...” என்றார் ஞானகுரு.

அமைதியாக கேட்டுக் கொண்டார் மகேந்திரன்.







மகிழ்ச்சி தரும் க்ளைமாக்ஸ்

# சலங்கை ஒலி



இரண்டாவது வருபவரை உலகம் ஒருபோதும் ஞாபகம் வைத்துக் கொள்வதில்லை என்று ஒரு பொன்மொழி உண்டு. ஏனென்றால் ஜெயித்தவர் கள் கதை மட்டுமே இங்கே படிக்கப்படுகிறது, தோற்றுப் போனவர்களுக்கும் கதை இருக்கிறது. ஆனால், அதை படிக்க யாரும் விரும்புவ தில்லை என்பதே நிஜம்.சினிமா, தொழில், விளையாட்டு என்று சகல துறைகளிலும் தோல்வி அடைந்தவர்கள் எண்ணிக்கை ஏராளம். ஒரே ஒருவரது வெற்றி பிரமாண்ட மாகக் கொண்டாடப்படும் இந்த உலகத்தில், தோற்றுப் போனவரின் வலி, வேதனை எப்படி இருக்கும் என்பதை யாரும் சித்தரிப்பதில்லை. அரிதிலும் அரிதாக கலையிலும் காதலிலும் வாழ்க்கையிலும் தோற்றுப் போன ஒருவனது வாழ்க்கையை கலாரசனையுடன் சொல்லி யிருக்கும் திரைப்படம் சலங்கை ஒலி.

லோகேஷ் கனகராஜின் விக்ரம் பட நாயகன் கமல்ஹாசனின் பிம்பத்தை ரசிக்கும் இன்றைய தலைமுறையினர், ‘சலங்கை ஒலி’ என்ற டப்பிங் படத்தைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை. 1983ம் ஆண்டு வெளியான இந்த டப்பிங் படம் நேரடி படம் போலவே



www.gyaanaguru.com

வசூலில் சாதனை படைத்தது. அதோடு, படம் பார்த்த அத்தனை ரசிகர் களையும் அழுத்தமாக திரையுடன் கட்டிப் போட்டது. இதற்கு காரணம், தோற்றுப் போன மக்களே இங்கு அதிகம் இருக்கிறார்கள். எல்லோரிடமும் சலங்கை ஒலி படத்தின் நாயகன் பாலுவின் சாயல் இருக்கிறது. அதனாலே தீவிர சினிமா ரசிகர்களால் இன்றளவும் கொண்டாடப்படும் படமாக இருக்கிறது கே.விஸ்வநாத் இயக்கத்தில் வெளியான சலங்கை ஒலி.

ஒரே ஒரு பாடலில் இந்தப் படத்தின் கிளைமாக்ஸ் சிம்பிளாக முடிந்துவிடுகிறது. தோற்றுப்போன ஒரு கலைஞனின் ஆசையை அவனுடைய தேவதை நிறைவேற்றி வைப்பது தான் சலங்கை ஒலி படத்தின் ஒருவரிக் கதை. ஒவ்வொரு கலைஞனும் கைதட்டலுக்கும் பூரணத்துவத்துக்குமே ஆசைப்படுகிறார்கள். இரண்டையும் ஒருசேர அனுபவித்து மரணத்தைத் தழுவுகிறான் நாயகன். இந்த கிளைமாக்ஸ் பாடலைப் பார்க்கும் முன்னதாக, கதையை சிம்பிளாகப் பார்த்துவிடலாம்.

முதுமையிலும் வறுமையிலும் காலம் தள்ளும் கமல்ஹாசனிடம் இருந்து படம் தொடங்குகிறது. எல்லா நிறுவனங்களிலும் வயதான ஊழியர்களை ஒரு சுமையாகவே கருதுவார்கள். அப்படித் தான் பாலுவும் அந்த பத்திரிகை அலுவலகத்திற்கு சுமையாக இருக்கிறான். சைலஜா ஆடும் பரதநாட்டியத்தை கடுமை யாக விமர்சித்து எழுதுகிறான்.

அபிநய சுந்தரி, நாட்டிய நர்த்தகி என்றெல்லாம் பேரும் புகழுமாகத் திகழும் ஷைலஜாவுக்கு அந்த விமர்சனம் கோபத்தை உண்டாக்குகிறது. நேரடியாகவே பத்திரிகை அலுவலகத்திற்கு வந்து, 'உனக்கெல்லாம் பரதநாட்டியம் பற்றி என்ன தெரியும்?' என்று திமிராகக் கேட்கிறாள்.

அப்போது தொடங்குகிறது யாரும் எதிர்பார்க்காத அட்டகாச கச்சேரி. தனக்கு எத்தனை வகை நாட்டியம் தெரியும் என்று ஆடிக் காட்டி அத்தனை பேரையும் மிரள வைத்து, வேலையை விட்டு வெளியே வருகிறான். சினிமாவில் இப்படியொரு அமர்க்களமான காட்சி அமைத்ததற்கு இயக்குநர் விஸ்வநாத்திற்கு ஒரு விழாவே எடுக்கலாம். அப்படியொரு காட்சியமைப்பு.

இந்த விஷயம் ஷைலஜாவின் அம்மா மாதவிக்குத் தெரியவருகிறது. பாலகிருஷ்ணன் என்ற

மந்திரச்சொல்

உங்களைக் கொண்டாடத் தெரியாத நபரின் காதலைப் புறக்கணியுங்கள்.



பெயரைக் கேட்டதும் அவள் தன்னுடைய இளமைக் காலத்திற்குப் போகிறாள். அவளுக்குத் தெரிந்த பாலகிருஷ்ணன் மட்டுமே அப்படி நடந்துகொள்வான் என்று நினைக்கிறாள். அந்த பாலகிருஷ்ணனிடம் பரதத்தை முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஷைலஜாவுக்கு உத்தரவு போடுகிறாள்.

தனக்கு எல்லாமே தெரியும் என்று நினைக்கும் ஷைலஜாவுக்கு பாலகிருஷ்ணனை குருவாக ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை. அடம் பிடிக்கிறாள். ஆனாலும் அம்மா மாதவி உறுதியாக இருக்கிறாள். பாலகிருஷ்ணன் இருக்கும் ஊருக்கே மகளை அழைத்துவருகிறாள். அதன் பிறகே பாலகிருஷ்ணனுக்கும் மாதவிக்குமான உறவு கவிதையாக விரிகிறது.

பரதக் கலையின் மீது பாலு உயிராக இருக்கிறான். பரதம் தொடர்பான அனைத்துக் கலைகளையும் கற்று தன்னுடைய பாணியில் புதுமையாக கலந்து தரவேண்டும் என்பதற்காக அடுத்தடுத்து கற்றுக்கொண்டே இருக்கிறான். அவனுக்குத் திறமை இருந்தாலும் வெற்றிக்கு ஏழ்மை குறுக்கே நிற்கிறது. அந்த நேரத்தில், ஒரு தேவதை போன்று அவன் வாழ்வில் அறிமுகமாகிறாள் மாதவி. அவனுக்குள் இருக்கும் கலைத்தன்மையைக் கண்டு வியக்கிறாள். அதை உலகம் முழுக்க கொண்டுசெல்ல ஆசைப்படுகிறாள்.

பாலுவாக கமல்ஹாசன் வாழ்ந்தார் என்று கூட சொல்லமுடியாது. இந்த படத்தில் நடிப்பதற்கும் பரதநாட்டியம் ஆடுவதற்கும் அவதாரம் எடுத்து வந்தவர் போன்றே இருப்பார் கமல். இந்த வேடத்தில் உலகில் வேறு எந்த ஒரு நடிகரையும் பொருத்திக் கூட பார்க்க முடியாது என்பது கமலுக்குக் கிடைக்கும் வெற்றி. கமலுக்கு ஈடு கொடுத்து அவரை விடவும் அற்புதமாக பாவனைகள் காட்டி நடித்திருப்பார் பேரழகி ஜெயப்ரதா.

கிளைமாக்ஸ் காட்சிக்கு ஈடாக இன்னொரு காட்சியும் படத்தில் உண்டு. லோக்கல் மேடை ஏறாத கமல்ஹாசனை டெல்லியில் மிகப்பெரிய கலைஞர்கள் பங்கேற்கும் ஒரு நாட்டிய விழாவில் ஆடுவதற்கு, அவருக்குத் தெரியாமலே ஏற்பாடு செய்திருப்பார் ஜெயப்ரதா. அந்த அழைப்பிதழுடன் கமல்ஹாசனைப் பார்க்க வருவார். ‘‘டெல்லி டான்ஸ் திருவிழா நல்லா இருக்குமா?” என்று கேட்டபடி கையில் அந்த அழைப்பிதழைக் கொடுப்பார்.

”அடேங்கப்பா… இந்த இன்விடேஷனை பார்க்கிறதுக்கே பாக்கியம் செய்திருக்கணும்” என்றபடி வரிசையாக அந்த இன்விடேஷனில் இருக்கும் ஒவ்வொரு டான்ஸரையும் பற்றிப் பேசி புகழ்ந்துகொண்டே வருவார். ஒரு பக்கத்தில் கமல்ஹாசன் டான்ஸ் ஆடுவதாக போட்டோவுடன் அறிவிப்பு இருக்கும். அதை கண்டதும் அப்படியே மெய்மறந்து புல்லரித்துப் போய் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறும் கமலிடம், ‘‘இவரும் பெரிய டான்ஸர் தான்” என்று ஜெயப்பிரதா சொன்னதும்… சட்டென அவர் கையைப் பிடித்து முத்தம் கொடுப்பார்.

அதைவிட வேறு எந்த வகையிலும் ஒரு கலைஞனால் தன்னுடைய நன்றியைத் தெரிவிக்க முடியாது. அப்படியொரு உணர்ச்சிப்பிழம் பாகி இருப்பார். அந்த உணர்ச்சிகளை மேலும் மெருகேற்றும் வகையில்



இளையராஜா வின் பாடல் ஆரம்பமாகும். 'நாத விநோதங்கள் நடன சந்தோஷங்கள்… பரம சுகங்கள் தருமே…' என்ற பாடலுக்கு கமல்ஹாசனும் ஜெயப்ரதாவும் பின்னிபெடலெடுத்திருப்பார்கள்.

இனிமேல் கமல்ஹாசனின் கலை வாழ்வு பிரகாசமாகிவிடும், இதைவிட வேறு என்ன வாய்ப்பு வேண்டியிருக்கிறது என்று மகிழும் நேரத்தில் எதிர்பாராமல் கமல்ஹாசனின் அம்மா மரணம் அடைந்துவிடுகிறார். விழாவில் பங்கேற்க முடியாமல் போகிறது.

அந்த சோகத்துடன் இருப்பவனை தேற்றுகிறார் ஜெயப்ரதா. தன் மனதுக்குள் கோயில் கட்டி வைத்திருக்கும் ஜெயப்பிரதா மீது வந்திருக்கும் காதலை சொல்லிவிடலாம் என்று கமல் நினைக்கும் நேரம், எங்கிருந்தோ வருகிறார் அவரது கணவன். மனம் திருந்தி வந்தவன் ஜெயப்ரதாவை அழைத்துச் சென்றுவிடுகிறார். அவளோடு கமல்ஹாசனின் கலையும் போய்விடுகிறது.

ஒட்டுமொத்த இடியும் தன் தலை மீது விழுந்தது போன்று குழம்பி நிற்கிறான் பாலு. கலையை மறந்து குடிகாரனாகிறான். நண்பன் சரத்பாபுவால் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறான். அவன் வேலையைத் தொலைத்துவிட்டு நிற்கும் நேரம் ஜெயப்ரதா வருகிறார். அவரது கணவன் இறந்துவிட்டார் என்ற செய்தி சரத்பாபுக்கே அதிர்ச்சியாக இருக்கிறது.

'உங்களை இந்த கோலத்தில் பார்த்தால் பாலு தாங்க மாட்டான். அவன் உடல் மிகவும் மோசமாக இருக்கிறது. வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டுமே அவன் குடிக்காமல் இருக்கிறான், அது உங்களுடைய திருமண நாள். எனவே விதவைக் கோலத்தில் அவனை பார்க்க வேண்டாம்' என்கிறான். அதனால்



www.gyaanaguru.com
www.gyaanaguru.com



ஷைலஜா யார் என்று தெரியாமல் பாடம் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்படுகிறாள்.

கமல்ஹாசன் விருப்பமில்லாமல் பாடம் சொல்லித்தர, ஷைலஜா விருப்பம் இல்லாமல் பாடம் படிக்கிறாள். குடி போதையில் கிணற்றின் மீது நடனம் ஆடும் கமல்ஹாசனைக் காப்பாற்று வதற்காக பொட்டு வைத்துக்கொண்டு அவன் முன்பு வந்து நிற்கிறாள் ஜெயப்ரதா.

ஒரே நிமிடத்தில் எல்லாம் மாறிவிடு கிறது. மீண்டும் கமல் வாழ்வில் வசந்தம் வருகிறது. தன்னுடைய தேவதையின் மகள் ஷைலஜா என்பதை அறிந்ததும் தன்னையே நொந்துகொள்கிறான்.

அவள் நன்றாக ஆடுகிறாள், சின்னத் தவறு செய்தவளை நான் திட்டிவிட்டேன் என்று வருந்துகிறான். மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு, படுக்கையில் படுத் தபடியே தனக்குத் தெரிந்த அத்தனை கலைகளையும் கற்றுத் தருகிறான்.

தன்னுடைய அம்மாவுக்கும் கமல்ஹாசனுக்கும் தவறான உறவு இருப்பதாக நினைத்து முடிந்த வரை கமல்ஹாசனை அவமானப்படுத்துகிறாள் ஷைலஜா. இப்போது அவள் என்ன செய்தாலும் அதை கமல்ஹாசன் தவறாகப் பார்ப்பதே இல்லை.

ஒருவழியாக அவளுடைய நாட்டிய அரங்கேற்ற நாளில் கிளைமாக்ஸ் ஆரம்பமாகிறது. அந்த மேடைக்கு வீல்சேரில் வரும் கமல்ஹாசன், ஜெயப்ரதாவை தன்னை அடையாளம் கண்டு கொண்ட தேவதை என்றும் உள்ளத்தில் வைத்து பூஜிக்கும் கடவுள் என்றும் புகழ்ந்து வணங்குகிறான்.

அப்போதுதான் அவர்களுடைய புனிதமான உறவை புரிந்து கொள்கி றாள் ஷைலஜா. அதுவரை அவள் செய்த தவறுகளுக்கு வருந்துகிறாள். கமல்ஹாசனிடம் கொட்டிக்கிடக்கும் கலையை வாழவைப்பதற்காக அம்மா தன்னை பலவந்தப்படுத்தி அழைத்து வந்திருப்பதை உணர்கிறாள். தன் தவறுக்குப் பிராயசித்தம் போன்று உயிரைக் கொடுத்து நடனம் ஆடத் தொடங்கிறாள்.

’வேதம் அணுவிலும் ஒரு நாதம்... நான் பாடும் ராகங்கள் நாதவிநோதம்...’ என்று இளையராஜாவின் ராக ஆலோபனையில் எல்லோருமே திரைக்குள்ளும் திரைக்கு வெளியிலும் புளகாங்கிதம் அடைகிறார்கள். ஷைலஜா அப்படியே கமல்ஹாசனாக மாறி ஆடுகிறாள். அவளுக்குக் கிடைக்கும் கை தட்டல்களைக் கேட்கிறான். தான் சின்ன வயதில் பார்த்த கமல்ஹாசன் நடனத்தை தன் மகள் நடனத்தில் கண்டு ரசிக்கிறாள் ஜெயப்ரதா. தன்னுடைய கலையை அடுத்தவருக்குக் கடத்திவிட்ட திருப்தி யுடன், அந்த நடனத்தைப் பார்த்தபடி உயிர் விடுகிறான் பாலு.

அந்த நடனத்தைத் தொந்தரவு செய்யாமல் அப்படியே வீல் சேரை திருப்பிக்கொண்டு சரத்பாபு அரங்கத்தை விட்டு வெளியேறுகிறான். செத்துக்கிடக்கும் கமல் உடல் மீது திடீரென மழை பொழிகிறது. தன்னுடைய கைகளால் கமல் உடல் மீது மழை விழாமல் சரத்பாபு தடுக்கிறான். அப்போதும் குடை பிடித்து மீண்டும் தேவதையாக காட்சி தருகிறார் ஜெயப்ரதா.

கமல் உடலுடன் இருவரும் நகர்கிறார்கள். அவர்கள் மீது END என்று காட்டப்படும். முடிந்தது என்று நினைக்கும் முன், அடுத்து END எழுத்துக்கு மேலே, NO என்று வரும். பிறகு, NO END எழுத்துக்களுக்குக் கீழே FOR ANY ART என்று டைட்டில் வரும். அதாவது NO END FOR ANY ART என்கிற டைட்டிலுடன் முடியும்.கலைஞர்கள் சாகலாம் கலை சாகாது என்பதை அற்புதமாகக் காட்டியிருப்பார் விஸ்வநாத். ரத்தமும் சதையும் கலையினால் ஊறிப்போன ஒருவரால் மட்டுமே இப்படி ஒரு தரமான படத்தை இயக்க முடியும். விஸ்வநாத்தின் கனவுக்கு இளையராஜா வர்ணம் தீட்டினார் என்றால் கமல்ஹாசனும் ஜெயப்ரதாவும் அதற்கு உயிர் கொடுத்து சிறப்பித்திருப்பார்கள். சினிமாவை காதலிக்கும் ஒவ்வொரு நபரும் பார்க்க வேண்டிய திரைப்படம். முழு படம் பார்க்க முடியவில்லை என்றாலும் கடைசி அரை மணி நேரம் கிளைமாக்ஸ் காட்சியை மட்டுமாவது பாருங்கள். ஒரு நல்ல படத்தை ரசித்த திருப்தி நீண்ட நாட்கள் ஞாபகத்தில் நிழலாடும்.







# பிளாக் பியூட்டி மாணவிக்கு கவுன்சிலிங்



எஸ்.கே.முருகன்,
மனவள ஆலோசகர்.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் தனலட்சுமியுடன் அவரது தாயும் தந்தையும் வந்தார்கள். மாநிறத்துக்கும் கொஞ்சம் கீழே இருந்த தனலட்சுமி பற்களுக்கு கிளிப் போட்டிருந்தார். தலைமுடியை பறக்க விட்டிருந்தார். கண்கள் அங்கும் இங்குமாக அலைபாய்ந்தது.

தந்தை பேசத் தொடங்கினார். ‘‘சார், நான் பிரைவேட் கம்பெனியில் மேனேஜரா இருக்கேன். காலையில் போனா ராத்திரிக்குத் தான் வருவேன். என் மனைவி விஷாலாட்சி வீட்ல தான் இருக்காங்க. இவளுக்கு ஒரு தம்பி ஆறாவது வகுப்பு படிக்கிறான்.

போன வருஷம் எட்டாம் வகுப்பு போன நேரத்தில், ‘கிளாஸ் ஃபர்ஸ்ட்’ எடுத்தா செல்போன் வாங்கித்தருவீங்களான்னு தனலட்சுமி கேட்டாள். அதுவரைக்கும் அஞ்சு இல்லைன்னா ஆறாவது ராங்க் இருப்பா. நான் சரின்னு சொன்னேன். ராத்திரி, பகலா படிச்சு ஃபர்ஸ்ட் ராங்க் எடுத்துட்டா. எங்களுக்கும் ரொம்பவும் சந்தோஷம். அதனால ஒரு நல்ல செல்போன் வாங்கிக்குடுத்தேன்.

அதுக்குப் பிறகு எப்ப பார்த்தாலும் செல் போனும் கையுமா இருக்கிறா. நாங்க கண்டிச்சாலும் கேட்கிறதில்லை. நல்லா படிக்கிறேனான்னு மட்டும் பாருங்கன்னு சொல்றா, ஃபேஸ்புக், இன்ஸ்டாக்ராம்னு எல்லாத்துலேயும் நிறைய பேர்கிட்டே சாட் பண்றா. அதுக்கு கண்டிச்சதுக்கு சண்டை போட்டுட்டு வீட்டை விட்டுப் போயிட்டா...” என்று தயக்கத்துடன் நிறுத்தினார்.

‘‘கோவிச்சுட்டு சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிட்டாங்களா..?

தனலட்சுமியின் தந்தை பேசுவதற்குத்







ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
4 - 2

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மெண்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com



## பிளாக் பியூட்டி
### மாணவிக்கு கவுன்சிலிங்

தயங்கவே, அவரது தாயார் பேசினார்.

”ஸ்கூல் பேக்ல புத்தகத்துக்குப் பதிலா நாலைஞ்சு டிரெஸ், அவளுக்கு நாங்க வாங்கி வைச்சிருக்கிற நகையில பத்துப் பவுன் எடுத்துக்கிட்டு அவளோட ஸ்கூல் ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போயிட்டா…”

“அப்படின்னா..?”

“லவ் பண்றேன்னு சொல்லி அவங்க வீட்டுக்குப் போயிட்டா… அவங்க வீட்ல காச்மூச்சுன்னு சத்தம் போட்டாங்க, நாங்க போய் கூட்டிட்டு வந்தோம்…”

நான் எதிர்பார்க்காத தகவல் இது. தனலட்சுமியைப் பார்த்தேன். எந்த சலனமும் இல்லாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

“வீட்டை விட்டு கிளம்புறதுன்னா அடிச்சீங்களா..?”

“அன்னைக்கு நான் மாத்திரை போட்டுட்டு பத்து மணிக்கு படுத்துட்டேன். பாத்ரூம் போறதுக்கு எந்திரிச்சப்போ நைட் 1 மணி இருக்கும். தனலட்சுமி லைட் அணைச்சுட்டு சொல்போன்ல இருந்தா. கோபத்துல போனை புடுங்கி பீரோவுல பூட்டினேன். அந்த ராத்திரி நேரத்துல காட்டுத்தனமா கத்துனா, கத்தாதேன்னு அடிச்சேன். அதுக்கும் அவ அடங்காம ரொம்பவும் கத்துனா. இவரும் முழிச்சு வந்துட்டாரு. அந்த நேரத்துல பிரச்னை வேணாம்னு போனை திருப்பிக் குடுத்துட்டார். இந்த மாதிரி அடங்காப்பிடாரி வீட்டுக்கு வேணாம், வெளியே விரட்டுங்கன்னு சொன்னேன்.

அடுத்த நாள் காலையில் தனலட்சுமி, ‘எனக்கு மரியாதை இல்லாத வீட்ல நான் இருக்க மாட்டேன். எனக்கும் ஆளுங்க இருக்காங்க…’ன்னு சொன்னா. உடனே நான், ‘ரொம்ப சந்தோஷம். அங்கேயே போயிடு. நாங்க தலை முழுகிடுறோம்’னு சொன்னேன். வழக்கம் போல ஸ்கூல் பேக், டிஃபன் பாக்ஸ் எடுத்துட்டுப் போனா. சாயங்காலம் ஸ்கூல்ல இருந்து திரும்பி வரலை. அவளுக்குப் போன் செஞ்சேன். ரிங் போச்சு. அவ எடுக்கவே இல்லை. இவரை போன் செஞ்சு வரச்சொன்னேன். அவர் போன் செஞ்சும் அவ எடுக்கல. அவ ஃப்ரெண்ட்ஸ் போன் செஞ்சும் எடுக்கலை. வேற ஏதோ பிரச்னைன்னு பயந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக நினைச்சோம்.

அப்பத்தான் மூர்த்திங்கிற பையன் வீட்ல இருந்து அவங்க அப்பா போன் செஞ்சார். ‘என்ன மாதிரி பிள்ளை பெத்து வைச்சிருக்கீங்க. இந்த வயசுல எங்க வீட்டுக்கு வந்து பிரச்னை பண்ணிக்கிட்டு இருக்கிறா… நீங்க வந்து கூட்டிட்டுப் போகலைன்னா நாங்க போலீஸ் ஸ்டேஷன்ல ஒப்படைச்சுடுவோம்னு சொன்னாங்க. உடனே ஓடிப் போய் கூட்டிட்டு வந்துட்டோம். ரொம்பவும் அசிங்கம் அசிங்கமா எங்களைத் திட்டிட்டாங்க…” என்றவரின் கண்கள் கலங்கியது. தந்தையும் உணர்ச்சி ததும்ப அமர்ந்திருந்தார். அவர்களை வெளியே அனுப்பிவிட்டு தனலட்சுமியிடம் பேசினேன்.

“இவங்க சொல்றது உண்மையா தனலட்சுமி?”

“தன்ஸ்ன்னு கூப்பிடுங்க. தனலட்சுமிங்கிற பேர் டிரெண்டிங்கா இல்லை, இந்த பேர்ல தான் இன்ஸ்டா வைச்சிருக்கேன்…” என்றாள்.

“குட்… தன்ஸ்ன்னே கூப்பிடுறேன். எதுக்கு அந்த பையன் வீட்டுக்குப் போனீங்க?”

“மூர்த்தி ஸ்கூல் சீனியர். +2 கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறான். ராத்திரி அவன்கிட்டே, ‘எங்க வீட்ல ரொம்பவும் கொடுமைப்படுத்துறாங்க’ன்னு சொன்னேன். அப்போ அவன் தான், ‘நீ கிளம்பி வந்துடு. நாம ஏதாவது ஊர்ல போய் பிழைச்சுக்கலாம்’னு சொன்னான். அதனால நாலைஞ்சு டிரெஸ், கொஞ்சம் ஜுவல்ஸ் எடுத்துட்டு பஸ் ஸ்டாண்ட் போயிட்டேன். ஆனா, அவன் ஸ்கூலுக்குப் போயிட்டான்.

அவனுக்குப் போன் செஞ்சேன். ’விளையாட்டுக்குச் சொன்னேன். எங்க வீட்ல ஒத்துக்க மாட்டாங்கன்’னு சொன்னான். ஸ்கூல் விடுற வரைக்கும் லைப்ரரியில இருந்தேன். ஈவ்னிங் போன் செஞ்சேன். அப்பவும் அவன் எடுக்கலை. அதனால நேர அவங்க வீட்டுக்குப் போயிட்டேன். அவங்க அப்பாவும் அம்மாவும் ரொம்பவும் பேட்.. அதனால எங்க அப்பாகிட்டே சொல்லிட்டாங்க” என்றார்.

“நீங்க செஞ்சது சரின்னு நினைக்கிறீங்களா..? நல்லா படிக்கிற பொண்ணா இருக்கீங்க”

“நான் படிப்புல மட்டுமில்ல, லவ் பண்றதுலேயும் கில்லி. என்னைப் பத்தி என் வீட்ல இருக்கிறவங்களுக்கு எதுவும் புரியலை. என்னை பிளாக் பியூட்டின்னு பசங்க கனவு காண்றாங்க. என்னை திட்டிக்கிட்டே இருந்தா நான் வேற என்ன செய்ய முடியும்? மூர்த்தி செஞ்சது தான் தப்பு. இப்போ கணேஷ் கூட பேசிட்டு இருக்கேன். வீட்ல ஏதாச்சும் பிரச்னைன்னா சொல்லு, ஓடிப்போயிடலாம்னு சொல்லியிருக்கான். ஹைதராபாத்ல அவங்க அத்தை வீடு இருக்குதாம்…”

“கணேஷ் என்ன வேலை செய்றாரு..?”

“அவனும் எங்க ஸ்கூல் தான். +1 படிக்கிறான். ஆனா, வசதியான வீட்டுப் பையன்…”

“இப்போ நீங்க மைனர். யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது. கணேஷ் கூட எப்படி உங்களால வாழ முடியும்? ரெண்டு பேருக்கும் படிப்பு இல்லை, வேலை இல்லை, பிறகு எப்படி வாழ்வீங்க…”

“அதான் அவன் பணக்கார வீட்டுப் பையன்னு சொன்னேனே… நிறைய காசு வைச்சிருக்காங்க…”

“கணேஷை எங்கே சந்திச்சுப் பேசுனீங்க?”

“நேர்ல ஸ்கூல்ல பார்த்து சிரிச்சுப்போம் அவ்வளவுதான். போன்ல பேசுனா அம்மாவுக்கு காது கேட்ரும், பாம்புக் காது. அதனால சாட்ல பேசுவோம். அவன் கூட பேசுனா நேரம் போறதே தெரியாது…”

“அப்படின்னா எப்ப படிப்பீங்க…”

“ஸ்கூல்ல நல்லா கவனிப்பேன். வீட்ல அரை மணி நேரம் படிச்சா போதும். ஈஸியா நல்ல மார்க் வந்துடும்” என்று சிரித்தாள்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

“இந்த வயசுல படிப்பு மட்டும் தான் முக்கியம். உங்களுக்கு இருக்கிற திறமைக்கு ஸ்டேட் லெவல் மார்க் வாங்கலாம். நல்ல காலேஜ்ல படிச்சு, ஒரு வேலைக்குப் போன பிறகு இந்த மாதிரி ரிலேசன்ஷிப் வைச்சுக்கலாமே...”

‘’எங்க அப்பா மாதிரியே பேசுறீங்க... லைஃபை என்ஜாய் பண்ணி வாழணும். படிச்சு முடிச்சு வேலைக்குப் போனப்புறம் லவ் பண்றதுன்னா பாதி கிழவி ஆயிடுவேன். நான் ஒண்ணும் இப்போ கணேஷ் கூட ஓடிப்போக மாட்டேன். என்னை சீண்டிக்கிட்டே இருந்தாங்கன்னா நான் வேற என்ன செய்யமுடியும்?”

”பசங்க தைரியமா பேசுவாங்க... ஆனா கல்யாணம்னா பயந்து போயிடுவாங்க... ஜாலியா ஊர் சுத்த ரெடியா இருப்பாங்க, வீட்ல அறிமுகம் செஞ்சுவைக்கச் சொன்னா பேச் அடிச்சுடுவாங்க. அவங்களுக்கு உங்களை மாதிரி பொண்ணுங்க கூட ஊர் சுத்தணும், ஆனா... யாரையும் நிமிர்ந்து பார்க்காத பொண்ணை கல்யாணம் முடிக்க நினைப்பாங்க.... அதனாலே இப்போ இந்த சிந்தனையே வேண்டாமே...”

“நீங்க பூமர் அங்கிளா... காலம் ஃபாஸ்டா மாறிடுச்சு. நான் கணேஷை மட்டுமில்ல, ஒரே நேரத்துல நாலைஞ்சு பசங்க கூட ரிலேசன்ஷிப்ல இருக்கேன்... அது கணேஷுக்குத் தெரியும். ஆனாலும், அவன் என்னை கட்டுப்படுத்த மாட்டான். எனக்காக எதுவும் செய்வான்..” என்றாள் உறுதியுடன்.

மிகவும் ஆழமான காதல் நம்பிக்கையில் இருக்கிறாள் தனலெட்சுமி என்பது புரிந்தது. சினிமாவில் பார்ப்பதையும், கற்பனை செய்வதை எல்லாம் நிஜம் என்று நம்புகிறாள். சமூகவலைதளத்தில் பெண்ணுரிமைக்கு ஆதரவு தரும் நபர்கள் நிஜத்தில் அப்படி இருக்க மாட்டார்கள் என்பதை எல்லாம் தனலெட்சுமி புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை என்பது புரிந்தது. கவுன்சிலிங் என்ற வகையில் இவளுடன் பேசுவது எந்த வகையிலும் பயன் தராது என்பது தெளிவாகத் தெரிந்தது.

அதனால், “சரிம்மா... நீ வெளியே இருந்துட்டு அம்மா, அப்பாவை மட்டும் உள்ளே வரச்சொல்லு” என்றேன்

உள்ளே வந்தவர்களிடம், “தனலட்சுமியிடம் இப்படியொரு மாற்றத்தை எப்போது உங்களால் பார்க்க முடிந்தது?” என்று கேட்டேன்.

“செல்போன் வாங்கிக் கொடுத்த பிறகு...” என்றார் தந்தை.

“ஏழாம் வகுப்புல வயசுக்கு வந்ததுல இருந்து

**மந்திரச்சொல்**

பணம்
வசதிக்குத்
தான்
முக்கியம்,
வாழ்வதற்கு
அல்ல.

என கூட மல்லுக் கட்டிக்கிட்டுத்தான் இருக்கிறா. என்னை மட்டும் கருப்பா பெத்துட்டேன்னு சண்டை போடுவா. கண்ட கண்ட க்ரீம் வாங்கிக் குடுக்கச் சொல்வா. பியூட்டி பார்லருக்குப் போகணும்னு அழுவா. அழகாயிட்டேன்னு சொல்லிக்கிட்டே இருப்பா, நிறைய பசங்க என்னை பார்க்கிறாங்கன்னு சொல்லுவா... நான் இவ்வளவு தூரத்துக்குப் போகும்னு நினைக்கலை’’. நிதானமாகப் பேசினேன். ‘’மனதில் குழப்பத்துடன் இருப்பவர்கள், நல்லபடியாக மாற நினைப்பவர்கள், முடிவு எடுக்கத் தடுமாறுபவர்களுக்கு மட்டுமே கவுன்சிலிங் மூலம் தீர்வு காண முடியும். தனலட்சுமி பழைய தவறுக்காக வருந்தவில்லை, பெற்றோரின் கவலை, பாசம், அன்பு எல்லாம் அவளை கொஞ்சமும் பாதிக்கவே இல்லை. அவர் வேறு ஒரு கற்பனை உலகத்தில் வாழ்கிறார்.

விமானங்கள் பறப்பதற்காகப் படைக்கப்பட்டவை என்றாலும் அவை தரையில் தான் நிற்க வேண்டும். ஆனால், தனலட்சுமி தரைக்கு வராமல் கற்பனை உலகத்திலே வாழ ஆசைப்படுகிறார். எனவே நிஜ உலகத்திற்கு அவர் வரவேண்டும் என்றால் மருந்துகளும், ஹார்மோன் சிகிச்சையும் தேவைப்படலாம். எனவே, ஒரு மனநல மருத்துவரிடம் அழைத்துச்சென்று தாமதிக்காமல் சிகிச்சையைத் தொடங்குங்கள். நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் அவர் மோசமான மனநிலைக்குப் போய்க்கொண்டே இருப்பார்” என்று விடை கொடுத்தேன்.

இப்போது மருத்துவ சிகிச்சையில் இருக்கிறார் தனலட்சுமி. விரைவில் விமானம் தரையில் இறங்கட்டும்..





www.gyaanaguru.com



# பட்டாம்பூச்சி

## விரட்டாதீங்க... வரவழையுங்கள்.

## பணமும் காதலும்

**தா**த்தா, அப்பா போன்று தானும் ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக ஆசைப்பட்டான் மகேந்திரன். எனவே, அவனுடைய சேமிப்பை முதலீடாகப் போட்டு ஒரு தொழில் தொடங்கினான். ஆனால், அவன் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ரொம்பவே சோர்ந்து போனான்.

தோற்றுப் போன முகத்துடன் தாத்தாவை சந்தித்தான். ‘‘தாத்தா... உங்களைவிட அப்பாவை விட பெரிய வெற்றி அடைய ஆசைப்பட்டேன். ஆனால், என் முயற்சி தோல்வி அடைந்துவிட்டது. என்னுடைய இலக்குகள் சரியானவை. ஆனால், அவற்றை அடைய முடியவில்லை. வெற்றியைப் பிடிக்க முயன்று தோற்றுப் போகிறேன்... ” என்றேன்.

அவரது தோட்டத்தில் ஒரு பட்டாம்பூச்சி பறந்து கொண்டிருந்தது. அதை அவனிடம் காட்டி, ‘‘அதை எப்படியாவது பிடித்துக் கொண்டுவா... உனக்கு நான் வெற்றிக்கு வழி சொல்லித் தருகிறேன்” என்றார்.

’’பட்டாம் பூச்சி பிடிக்கவா... விளையாடுறீங்களா?”

“அட, சும்மா டிரை பண்ணு” என்றார். உடனே மகேந்திரன் எழுந்து போனான். மெதுவாக அருகில் போவதற்குள் அது பறந்துவிட்டது. அடுத்தடுத்த செடிக்குப்



போன பிறகும் அதை பிடிக்க முடியவில்லை. சட்டென்று அந்த பட்டாம் பூச்சி மேலே எழுந்து காணாமல் போகவே, வீட்டுக்குள் தோல்வியுடன் வந்தான்.

''என்னால், இதைக் கூட செய்ய முடியவில்லை..'' என்றான்.

உடனே தாத்தா அந்த பால்கனியை திறந்து வைத்தார்... ஜன்னலைத் திறந்து வைத்தார். அதன் பிறகு மகேந்திரனிடம் பேசத் தொடங்கினார்.

''நீ வண்ணத்துப்பூச்சிகளைத் துரத்துவதில் நேரத்தைச் செலவிட்டால், அவை பறந்துவிடும். அதை உன்னால் பிடிக்க முடியாது. ஆனால் நீ ஒரு அழகான தோட்டத்தை உருவாக்கினால் வண்ணத்துப்பூச்சிகள் உன்னைத் தேடி வரும். பட்டாம்பூச்சி என்பது வாழ்க்கையின் இலக்குகளைப் போன்றது. உடனடியாக இலக்குகளை அடைந்து வெற்றிபெற ஆசைப்படலாம். ஆனால் நாம் நமது திறமைகளில் கவனத்தை செலுத்தும் போது உண்மையான மாற்றம் நிகழ்கிறது, அருமையான தோட்டத்தை வளர்த்து பட்டாம்பூச்சிகளை வரவழைப்பது போல, உன் திறமைகளை வளர்த்துக் கொண்டால் வெற்றியும் பணமும் உன்னைத் தேடி வரும்'' என்றவர், ''உன்னைத் தேடி பட்டாம் பூச்சி வந்துவிட்டது'' என்றார்.

பால்கனியைத் திறந்துவிட்டதால் அங்கு வைத்திருந்த செடிகளைத் தேடி சில பட்டாம் பூச்சிகள் வந்துவிட்டன. மகேந்திரனுக்கு நிறைய புரிந்தது. எனக்கு பணம் பற்றி இன்னும் சொல்லுங்கள் என்று கேட்டான்.

''நிறைய பேர் பணத்தை நேசிக்கிறார்கள். பணம் சம்பாதிக்க எதுவும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். முதல் லட்சத்தை சம்பாதிப்பது மட்டுமே கடினம். இரண்டாவது லட்சத்துக்கு அத்தனை கஷ்டம் இருக்காது. மூன்றாவது லட்சம் அதைவிட சுலபமாகக் கிடைத்துவிடும்.

எனவே, பணம் என்பது இங்கு முக்கியம் அல்ல. அதை தேடுவதில் அர்த்தமும் இல்லை. பணம் உனக்கு நிறைய வசதிகள் தரலாம்என்றாலும்அதை அனுபவிப்பதற்கு எல்லைகள் இருக்கிறது. ஒரு நாளைக்கு மூன்று நேரத்துக்கு மேல் உன்னால் சாப்பிட முடியாது. நீ கோடி ரூபாய் சம்பாதித்தாலும் அவ்வளவு தான் சாப்பிட முடியும். கோடி கோடியாக சம்பாதித்தாலும் பணம் உனக்கு எதுவும் தராது.

அதாவது, பணத்தை நீ என்ன செய்யப் போகிறாய் என்பது முக்கியம் இல்லை, பணம் உன்னை என்ன செய்கிறது என்பது ரொம்ப முக்கியம். அதாவது உன் வாழ்க்கையை, உன் இளமையை, உன் நண்பர்களை, உன் உறவுகளையும் பணம் பிரித்துவிடக் கூடாது. எனவே, உன் திறமையைக் கண்டுபிடித்து அதை ஒரு தொழிலாக மாற்று. உன்னைத் தேடி பணம் வரும். பணம் மட்டுமல்ல காதலையும் நீ தேடாதே. நீ கவர்ச்சியாக உடல் வைத்திருந்தால், ஆரோக்கியமாக இருந்தால், நல்ல பழக்கவழக்கத்துடன் இருந்தால் காதலும் தேடி வரும்....'' என்றார்.







# கவித்துவம்

சிறிது தூரம் பின்தொடர்கிறது நாய்
அவ்வளவு தூரம்தான் வாழ்வு
அவ்வளவு தூரம்தான் நம்பிக்கை
அவ்வளவு தூரம்தான் ஏமாற்றம்
அவ்வளவு தூரம்தான்
நான் நீங்கள் நாய்

- நிலாகண்ணன்

# ஞானகுரு பதில்கள்

**? பிரச்னை மேல் பிரச்னைகள் வருகின்றன. வீட்டை மாற்றிவிட்டேன். ஆனாலும் பிரச்னைகள் ஓய்வதில்லை. என்ன தீர்வு..?**

**– சி.ஜேம்ஸ் வசந்தன், திருநெல்வேலி.**

**ஞானகுரு :**

விபத்தில் அடிபட்டு கீழே விழுந்தவுடன், அந்த வண்டி ராசியில்லையோ, கிளம்பிய நேரம் சரியில்லையோ, யார் முகத்தில் விழித்தோம், செய்வினை வைச்சிருக்காங்களா என்றெல்லாம் யோசிக்கிறார்கள். வண்டி சரியாக பராமரிக்கப் பட்டிருக்கிறதா, சாலையில் மணல் கிடப்பதைக் கவனிக்கவில்லையா, கவனமாக வ்ண்டி ஓட்டவில்லையா என்பது போன்ற உண்மை தேடுவதைப் புறக்கணிக்கிறார்கள். அதனால் தான் சிக்கல் வந்தவுடன் வீட்டை மாற்றுவது, ஜோதிடரை மாற்றுவது, வணங்கும் தெய்வத்தை மாற்றுவது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இப்படி செய்வதால் பிரச்னைகள் தீர்வதில்லை, மீண்டும் மீண்டும் வந்துகொண்டே இருக்கின்றன.

இன்னும் சிலர் பிரச்னையை மறந்துவிட்டு தீர்வுக்காக அலைகிறார்கள். கடன்காரர் நெருக்கியதும் உடனே வேறு யாரிடமாவது பணம் புரட்டிக் கொடுத்துவிடத் துடிக்கிறார்கள். இதனால் கடன்காரர் மாறுவாரே தவிர, கடன் தொகை அப்படியே இருக்கும். என்ன பிரச்னை என்றாலும் தீர்வு தேடுவதற்கு முன்பு அதற்கான காரணத்தைக் கண்டுபிடியுங்கள். உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், ஆலோசனை கேளுங்கள். பிரச்னையின் ஆணி வேரைக் கண்டுபிடித்து நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

தெளிவான புரிதலுடன் பிரச்னையை கண்டுபிடித்தல், நேர்மறை எண்ணத்துடன் பகுப்பாய்வு செய்தல், தீர்ப்பதற்கு பிறருடைய ஒத்துழைப்பு கோருதல், தோல்வி என்றால் ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஆகிய எல்லாம் இருந்தாலே பிரச்னையைத் தீர்க்க முடியும்.



**? நீண்ட ஆயுள் அதாவது 80 வயதுக்கு மேல் வாழ்வது வரமா... சாபமா..?**

**– ஏ.பூங்கோதை, சூலக்கரை.**

**ஞானகுரு ;**

உயிர் என்பதை வரமாகவே பார்க்க வேண்டும். ஏனென்றால் கோடிக்கணக்கான உயிரணுக்களில் ஒன்று தான் போராட்டத்தில் ஜெயித்து உருவமும் உயிரும் பெறுகிறது. இந்த உயிரை எத்தனை காலம் பாதுகாக்க முடியுமோ, அத்தனை காலம் பாதுகாப்பது தான் மனிதரின் கடமை. மீண்டும் குழந்தைத் தன்மையை அடைந்து கரைந்துபோவதே முதுமைக்கு அழகு. வரம், சாபம் என்பதெல்லாம் அவரவர் மனப்பான்மையைப் பொறுத்தது. பிறருக்குத் துன்பமாக அல்லது பாரமாக இருக்கிறோம் என்ற கவலை முதியவருக்குத் தேவையில்லை. குழந்தையைப் போன்று ஏதும் அறியாதவராக வாழ்தலே போதும்... ஏதாவது நடக்கும். எது நடந்தாலும் நல்லதிற்கே என்ற எண்ணம் போதும்.



**? கௌரவத்திற்காக வாழ்வதால்தானே வாழ்வில் தோல்வி கிடைக்கிறது.?**

**– எஸ்.அழகேஸ்வரி, கருப்பசாமி நகர்.**

**ஞானகுரு ;**

கௌரவம், மானம், அவமானம் போன்ற எல்லாமே வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை என்பதை எல்லா மனிதர்களும் மிகவும் தாமதமாகவே புரிந்துகொள்கிறார்கள். அப்படி புரிந்துகொள்ளும் நேரத்தில் வாழ்க்கை மிச்சமிருப்பதில்லை.



**? வீட்டில் தீபம் ஏற்றி வைப்பது வாழ்வை வளமாக்குமா..?**

**– என்.சரஸ்வதி நாராயணன், முத்தால் நகர்.**

**ஞானகுரு ;**

விளக்கு ஏற்றுதல் என்பது வீடுகளுக்கு மின்சாரம் வருவதற்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட ஒரு நடைமுறை. மாட்டுச் சாணத்தால் வீடு மெழுகிய பழக்கத்தை கைவிட்டது போன்று, இதை யும் விட்டுத் தள்ளலாம். தீபத்தால் எண்ணெய் காலியாகுமே தவிர, வாழ்வு வளமாகாது.





**? மகாலட்சுமி என பெண்களை வர்ணிப்பது ஏன்..?**

**– ஏ.ரமேஷ்குமார், அல்லம்பட்டி.**

**ஞானகுரு ;**

பெண்கள் விஷயத்தில் ஆண்கள் மகா அயோக்கியர்கள். கூச்சமே இல்லாமல் உலக அழகி என்று பொய் சொல்வார்கள். ராசியான மகாலட்சுமி என்பார்கள். உணவு போடும் அன்னலட்சுமி என்பார்கள். எல்லாமே காரியத்துக்காக காலைப் பிடிக்கும் பொய்கள். தங்கள் தேவை தீர்ந்ததும் மூதேவி என்பார்கள். பொறாமைக்காரி என்பார்கள். சண்டாளி என்பார்கள். விபச்சாரி என்பார்கள். பாராட்டு என்பது உண்மை இல்லை என்பதை புரிந்துகொள்ளும் பெண்ணால் மட்டுமே ஆணின் சூழ்ச்சியிலிருந்து தப்ப முடியும்.

**? மனிதனின் தனித்துவம் வெற்றி தருமா..?**

**– எம்.தண்டபாணி, முருகன் நகர்.**

**ஞானகுரு ;**

உசேன் போல்ட்டை விட வேகமாக ஓடக்கூடிய கால்கள் படைத்தவர்கள் இந்த உலகில் ஏராளம். ஐஸ்வர்யா ராயை விட அழகு படைத்த பெண்கள் எக்கச்சக்கம் இருக்கிறார்கள். வைரமுத்துவை விட சிறப்பாக கவிதை எழுதுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தங்கள் தனித்துவம் என்னவென்பதை கண்டறிந்து, அதை பட்டை தீட்டி உலகத்திற்குக் காட்டுபவர்களே ஜெயிக்கிறார்கள். ஒவ்வொரு மனிதருக்கும் கண்டிப்பாக ஒரு தனித்துவம் உண்டு. அதை கண்டறியாமலே நிறைய பேர் செத்தும் போகிறார்கள் என்பதே உண்மை.



**? வாழ்வில் முன்னேற வாய்ப்புகளை தேட வேண்டுமா அல்லது உருவாக்க வேண்டுமா..?**

**– டி.ராஜேந்திரன், சூலக்கரை**

**ஞானகுரு ;**

கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்பது என்றென்றும் மாறாத உண்மை. முன்னேறுவதற்கு வழி தேடத் தொடங்கினாலே, அது பாதையை உருவாக்கிவிடும். முயற்சி செய்யாதவர்களுக்கு எதுவும் தென்படாது.


www.gyaanaguru.com



## ?விவாகரத்து என்பது அவமானமா..?

**- என்.மனோகரன், சென்னை.**

**ஞானகுரு ;**

திருமணத்தைப் புனிதமாகக் கருதுபவர்கள் விவாகரத்தை அவமானமாகக் கருதுகிறார்கள். உண்மையில் புனிதம் என்பதும் இல்லை, அவமானம் என்பதும் இல்லை. விவாகரத்து செய்யாத தம்பதியர் அனைவரும் அன்புடன் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதில்லை. மூச்சுத் திணறினாலும் வெளியேற வழி தெரியாமலே பலரும் வாழ்க்கை நடத்துகிறார்கள். இணைந்து வாழ்வது இருவருக்கும் இடையூறு என்று உணர்பவர்கள், பேசி முடிவெடுத்துப் பிரிவது புத்திசாலித்தனம். இலக்கு தோல்வி அடையப் போவது தெரிந்தும் தொடர்ந்து பயணிப்பதில் அர்த்தமே இல்லை. உலகத்தை நேசிக்கத் தெரிந்தவர்களுக்கு அருகில் இருப்பவர்களை நேசிக்கத் தெரியாமல் போகலாம். அதீத அன்பும் சிலருக்கு மூச்சு முட்டலாம். எதுவாக இருந்தாலும் இருவரது தனிப்பட்ட விவகாரம். குழந்தை வளர்ப்பு மட்டுமே விவாகரத்தில் இருக்கும் மிகப்பெரும் இடையூறு. ஏனென்றால் குழந்தைக்கு ஆண், பெண் இருவரது நெருக்கமும் தேவைப்படுகிறது. அதற்காக கொடுமையைத் தாங்கிக்கொண்டு குடும்பம் என்ற அமைப்புக்குள் யாரும் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. இன்னும் கொஞ்ச காலங்களில் திருமணம் என்ற உறவு வழக்கொழிந்து போய்விடும். பிடித்தவர்களுடன் சேர்ந்து நிற்பார்கள், பிடிக்காதவர்களை விலகிச் செல்வார்கள். பறவை போன்று மனிதர்களும் மாறிவிடுவார்கள். அதுவே இயற்கை வகுத்த வழி.

## ?பிரபலங்களின் பிள்ளைகள் பெரும் பான்மையாக ஜொலிப்பதில்லையே ஏன்..?

**- எஸ்.சந்திரசேகான், பாண்டியன்நகர்.**

**ஞானகுரு ;**

பிரபலங்களின் பிள்ளைகளுக்கு எதையும் தேட வேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது. கையில் இருப்பதே தாராளம் எனும்போது இன்னும் ஏராளமான முயற்சிக்கு யாரும் ஆசைப்படுவதில்லை. மேலும், பிரபலங்களின் பிள்ளை என்பதாலே அவர்கள் ஜெயித்தே தீரவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.



## ?மனித வாழ்வில் நல்ல நேரம், கெட்ட நேரம் என்பதை எப்படி அறிந்துகொள்வது..?

**- பி.கோவிந்தராஜ், காமராஜ் நகர்.**

**ஞானகுரு ;**

இயல்பாக மூச்சு உடலுக்குள் சென்று வரும் எல்லா நேரமும் நல்ல நேரம். உணவு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், மூச்சு விட முடியாமல் உடல் அவஸ்தைப்படுவது மட்டுமே கெட்ட நேரம்.




## ?அரசு தன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமல் உணவு, உடை, வீடு, வாகனம், மருத்துவம் என அத்தனையும் கவனித்துக்கொண்டால், செலவு குறையும் தானே..?


**- வி.ராம்தாஸ், லட்சுமிநகர்.**

**ஞானகுரு ;**

கம்யூனிசம் இதையே பேசியது. எல்லோரும் அரசுக்கு உழைப்பைக் கொடுங்கள். நாங்கள் எல்லோருக்கும் சமமாகப் பிரித்துத் தருகிறோம் என்றது. உழைத்து எதற்கு அரசுக்குத் தர வேண்டும் என்று மனிதர்கள் எதிர்ப்பு காட்டியதால் அது தோல்வியடைந்தது. சர்வாதிகார ஆட்சியில் மட்டுமே அரசு ஊழியர்களை மிரட்டி வேலை செய்ய வைக்க முடியும். இனி அப்படியொரு நிலை வரப்போவதில்லை. ஏனென்றால், எல்லோரும் சமம் என்பதை எல்லோரும் ஏற்பதே இல்லை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற சம்பளம் எதிர்பார்ப்பதால் நிழல் நிஜமாகாது.








## ?என் அம்மா பற்றி என் மனைவி சொல்லும் தகவல்களை நம்பமுடியவில்லை... நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அம்மாவும் சுயநலமாக இருப்பார்களா..?

**- எஸ்.ராஜேந்திரன், சென்னை.**

**ஞானகுரு :**

அம்மா என்றால் பொய் சொல்ல மாட்டார், தியாக மனப்பான்மை கொண்டவர், பரந்த உள்ளம் கொண்டவர் என்றெல்லாம் பொதுவாக சொல்லப்படுவது உண்மை அல்ல. அவரும் ஒரு பெண். அம்மாவுக்கும் சுயநலம் உண்டு.

எனக்கு எல்லா பிள்ளைகளும் ஒன்று என்று அம்மாக்கள் சொல்வார்கள். ஆனால், பாகுபாடு பார்த்தே வளர்ப்பார்கள். பொதுவாக மூத்த பிள்ளைக்கு அதிகம் செல்லம் கொடுப்பார்கள். அடுத்து பிறந்த பிள்ளைகள் எல்லாம் அவர்களுடைய விருப்பமின்றி பிறந்த பிள்ளைகளாகவே இருப்பார்கள். அதனால் மற்றவர்களை அதிகம் மதிக்க மாட்டார்கள். அதேநேரம், எந்த பிள்ளை உயர்ந்த நிலையில் இருக்கிறதோ, அந்த பிள்ளையை அதிகம் கொண்டாடுவார்கள். தன்னுடைய வேண்டுதலால், தன்னுடைய உழைப்பால் அந்தப் பிள்ளை முன்னேறியது என்று தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வார்கள்.

பிள்ளைகள் தவறு செய்யும்போது நிறைய அம்மாக்கள் கண்டிக்காமல் அதை மூடி மறைப்பதுண்டு. அதனாலே நிறைய பிள்ளைகள் தைரியமாக பொய் சொல்லவும், தவறு செய்யவும் தொடங்குகிறார்கள். பிள்ளைகள் படிக்கும் காலம் வரையிலும் அம்மாக்கள் கணவனுக்கு மதிப்பு கொடுப்பார்கள். பிள்ளைகள் சம்பாதிக்கத் தொடங்கியதும் பிள்ளைகளுடன் சேர்ந்துகொண்டு கணவனை எதிர்ப்பார்கள், அவமானப்படுத்துவார்கள்.

மருமகள் மீது மகன் அதிக பாசம் வைப்பது தெரிந்தால் பிரச்னை செய்து சண்டை உருவாக்குவார்கள். எனவே, அம்மா என்ற உறவுக்கு அளவுக்கு அதிகமான மதிப்பும், மரியாதையும் அவசியம் இல்லை. அம்மாவுக்கு நீங்கள் மதிப்பு கொடுங்கள். அது போதும். உங்கள் குடும்பத்தின் மீதும் மனைவி மற்றும் பிள்ளைகள் மீது அம்மாவை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காதீர்கள். முக்கியமாக அம்மாவுக்காக மனைவியைப் பிரிந்துவிடாதீர்கள்.



## கடவுள் முன்பு என்ன செய்து கொண்டிருந்தார்?

# ஸ்டீபன் ஹாக்கிங் கேள்வி

மருத்துவர் சொன்னால் சரியாக இருக்கும் என்பதை உடைத்துக் காட்டிய இயற்பியல் அறிவியல் விஞ்ஞானி ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் ஒரு மருத்துவ ஆச்சர்யம். 21வது வயதில் ALS நோய் கண்டறியப்பட்ட நேரத்தில், ஸ்டீபன் ஹாக்கிங் 2 வருடங்கள் மட்டுமே உயிர் வாழ்வார் என்று மருத்துவர்கள் கணித்தார்கள். அந்த கணிப்பை பொய்யாக்கி 55 ஆண்டுகள் வாழ்ந்துகாட்டிய நம்பிக்கை நாயகன்.

ஸ்டீபன் ஹாக்கிங் என்றதுமே வீல் சேரில் தலையை சாய்த்துக்கொண்டு பரிதாபமாக காட்சியளிக்கும் ஒரு நபரே நம் கண்ணுக்குத் தெரிவார். ஆனால், அவர் சாதாரண மனிதர் அல்ல. கன்னத்தில் சில தசைகள் தவிர உடலின் அத்தனை பாகங்களும் செயலிழந்த நிலையிலும். பிடிவாதமாக வாழ்க்கையைக் காதல் செய்தவர்.

ஸ்டீபன் ஹாக்கிங் பள்ளியில், கல்லூரியுல் ஒரு சராசரி மாணவன்தான். ஆனால் அறிவியல் ஆர்வம் அதிகம். அந்தச் சமயம் ALS எனப்படும் Amyotrophic Lateral Sclerosis என்ற குறைபாட்டு நோயால்

www.gyaanaguru.com

www.gyaanaguru.com



மந்திரச்சொல்

தவறு
செய்வது
தவறல்ல,
அதை
மீண்டும்
செய்வதே
தவறு.

பாதிக்கப்பட்டார். கொஞ்சம் கொஞ்சமாக அவரின் உடல் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின. செயலிழக்கும் உறுப்புகளுக்கு ஈடான கருவிகளைத் தானே உருவாக்கி, அதை ஈடுசெய்து வந்தார். ஒரு கட்டத்தில், பெரும்பாலான உறுப்புகள் செயலிழந்து விட்ட நிலையில், 'ஈக்வலைஸர்' என்ற கம்ப்யூட்டர் புரோக்ராம் உதவியோடு... இன்று கன்னத் தசைகளின் அசைவுகள்மூலம், கம்ப்யூட்டர் குரலில் பேசினார்.

டைம் மெஷின் (Time Machine), பிளாக் ஹோல் (Black Hole), ஏலியன் (Alien), பிக்பேங் தியரி (Bigbang Theory) என அண்ட அறிவியலின் பல மைல்கல் ஆராய்ச்சிகளை மேற்கொள்பவர். இமேஜினரி டைம் (Imaginary Time) என்ற கோட்பாட்டின் அடிப்படையில், இவர் எழுதிய "எ ப்ரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்" (A Brief Histroy of Time) என்ற புத்தகம், தமிழ் உட்பட 35 உலக மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. தி யுனிவர்ஸ் இன் எ நட் ஷெல் (The Universe in a nut shell), மை ப்ரீஃப் ஹிஸ்டரி (My Brief History) என புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

கல்லூரி தோழி, ஜேன் வைல்டை காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர் பின்னர் தன்னை கவனித்துக்கொண்ட செவிலியர் எலைனுடன் காதல்கொண்டு, அவரைத் திருமணம் செய்துகொண்டதெல்லாம் வேற லெவல் ஆச்சர்யங்கள். 'வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது...' என்று வாழ்ந்து காட்டியவர்.

ஹாக்கிங்கிடம், கடவுள் உங்கள் முன்னால் வந்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், ''கடவுள் என்ற ஒன்று இருக்கவே முடியாது. அப்படி இருந்தாலும் அதுவும் இயற்பியல் விதிகளுக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டும். அந்த கடவுள் எந்த துகள்களால் ஆனது அதன் மூலக்கூறுகள் என்ன என்று ஆராய்வேன். எல்லாம் முன்னரே எழுதப்பட்டுவிட்டது. நம்மால் ஒன்றையும் மாற்ற முடியாது என்பவர்கள் கூட சாலையை கடக்க இருபக்கமும் கவனிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு மிகச்சிறிய நட்சத்திர குடும்பத்தின் ஒரு மிக சாதாரணமான ஒரு கிரகத்தில் வாழும் சற்றே மேம்பட்ட குரங்கினம் தான் நாம்.


கடவுளின் மேல் எல்லாம் பயம் இல்லை. அவரை நம்புகிறவர்கள் மீதுதான் பயமே. கடவுள் இந்த உலகத்தை படைப்பதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தார். இந்ந கேள்விகளை கேட்பவர்களுக்காக ஒரு நரகத்தை படைத்துக் கொண்டிருந்தார். கடவுள் சொர்க்கம் நரகம் எல்லாம் வெறும் கட்டுக்கதை கள். இருட்டை கண்டு அஞ்சும் மக்களுக்காக சொல்லப்பட்ட கட்டுக்கதைகள்" என்றார்.

தங்களுக்கு ஒரு பிரச்னை, உடலில் நோய் ஏற்பட்டது, 'கடவுள் கொடுத்திருக்கும் தண்டனை' என்று புலம்புபவர் களுக்கும் ஹாக்கிங்கிற்கும் எத்தனை வித்தியாசம்...

www.gyaanaguru.com



# கவித்துவம்




www.gyaanaguru.com

# ஞானகுரு

இயக்கத்தில்

# இணையுங்கள்

## மகிழ்ச்சியாக மாறுங்கள்

## மகிழ்ச்சியைப் பரப்புங்கள்



## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

## ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும்.

ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைபவருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: Gyanaguru Publication,
Union Bank of India, Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் - 9840903586, 7299753999




# யாரிடமும் சொல்லக்கூடாத ரகசியங்கள்

நான் ரொம்ப ஓப்பன் டைப். என்னிடம் எதுவும் ஒளிவு மறைவு கிடையாது என்றெல்லாம் பேசுவது அலுவலக விஷயங்களில் வேண்டுமானால் சரியாக இருக்கலாம். தனிப்பட்ட வாழ்க்கையில் அப்படி இருக்கவே கூடாது. எல்லோருக்கும் கொஞ்சமாவது ரகசியம் இருக்க வேண்டும். தங்கள் வாழ்க்கையைப் பற்றி வெளிப்படையாகப் பேசாத மனிதர்கள் மீது கவர்ச்சி இருக்கிறது.

அந்த வகையில் பிறருக்கு சொல்லக்கூடாத விஷயங்கள் என்னவென்று பார்க்கலாம்.

- முட்டாள்தனமாக பணம் யாரிடமாவது ஏமாந்து போயிருக்கலாம். அதனால் உங்களுக்கு வருத்தம் இருக்கலாம். ஆனால், இந்த விஷயத்தை யாரிடமும் பகிர்ந்துகொள்ளாதீர்கள். எத்தனை பெரிய முட்டாள் என்று அந்த விஷயத்தை சகலருக்கும் பரப்புவார்கள். இதனால் உங்களுக்கு அவமானமே மிஞ்சும்.
- வீட்டில் எவ்வளவு சொத்து இருக்கிறது, எவ்வளவு நகை இருக்கிறது என்பதெல்லாம் வேறு யாருக்கும் தெரியவேண்டிய அவசியம் இல்லை.
- தண்ணீரைக் கண்டால் பயம், உயரத்தைக் கண்டால் பயம் என்பது போன்று ஏதேனும் பயம் இருக்கலாம். அவற்றை எல்லாம் வெளியே சொல்லவேண்டிய அவசியம் இல்லை, தேவையில்லாத கிண்டலுக்கு ஆளாக நேரிடும்.
- கணவன், மனைவி படுக்கையறையில் எந்த அளவுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார், எதில் ஆர்வமாக இருக்கிறார் என்பதெல்லாம் மூன்றாவது நபர் யாருக்கும் தெரியவேண்டிய அவசியமே இல்லை.
- யாருக்காவது அவசரத்தில் கடன் கொடுத்து அல்லது வேறு வகையில் உதவி செய்திருக்கலாம். அந்த உதவி செய்யலைன்னா அம்புட்டுத்தான் என்பது போன்று யாரிடமும் சொல்லக்கூடாது.
- வீட்டு சாவி, பணம் போன்றவைகளை எந்த இடத்தில் வைப்பீர்கள் என்பதை வெளிப்படையாக யாரிடமும் சொல்லக்கூடாது.
- கணவன், மனைவியிடம் தனிப்பட்ட குறை இருக்கலாம், மறைவான இடத்தில் மச்சம் இருக்கலாம். இதையெல்லாம் யாரிடமும் சொல்லக்கூடாது.
- கணவன், மனைவிக்குள் சண்டை வருவது சகஜம். என்ன காரணத்துக்காக சண்டை, அந்த சண்டையின் போது எப்படிப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தினீர்கள் என்பதை எல்லாம் பேசக்கூடாது. இதனை பலரும் சாதகமாகப் பயன்படுத்துவார்கள். இதனாலே நிறைய குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன.







## மந்திரச்சொல்

பிறர் மீது
அன்பு
செலுத்த
கற்றுக்
கொடுப்பதே
பெற்றோரின்
முதல் கடமை

- உங்களை யாரேனும் பிரத்யேகமாகப் பார்க்கலாம், அன்பு காட்டலாம். இதை தவறான உறவாக மற்றவர்களிடம் சித்தரிக்கக்கூடாது.
- குழந்தைகளிடம் அப்பாவைப் பற்றி அம்மாவும், அம்மாவைப் பற்றி அப்பாவும் யாரும் குறை சொல்லவே கூடாது.
- தோழன், தோழியர் பற்றி படுக்கையறையில் பேசும் விஷயங்களை வெளியே சொல்லக்கூடாது. ‘என் வீட்டுக்காரருக்கு உன் மேல இண்ட்ரஸ்ட் இருக்கு’ என்று ஜாலியாகப் பேசுவது பின்னர் விபரீதமாக வந்து நிற்கும்.
- கார், நெக்லஸ் போன்ற ஏதேனும் வாங்குவதாக இருந்தால் முன்கூட்டியே வெளியே சொல்லாதீர்கள். ஆளுக்கு ஒரு ஐடியா கொடுப்பார்கள் அல்லது பணம் கேட்டு தொந்தரவு வரலாம்.
- சுற்றுலா சென்று திரும்பிய பிறகு அது குறித்து பேசினால் போதும். முன்கூட்டியே பேசினால், நாங்களும் வருகிறோம் என்று நிறைய பேர் தொற்றிக் கொள்வார்கள்.





# கடவுள் எப்போ டென்ஷன் ஆவார்..?

காட்டில் ஒரு புலி சிகரெட் பிடித்து கொண்டு நின்றிருந்தது. அப்பொழுது அந்த வழியாக வந்த ஒரு எலி, "சகோதரா, ஏன் இவ்வாறு சிகரெட் பிடித்து உன் வாழ்க்கையை வீணாக்குகிறாய்... என்னுடன் வா, இந்த காடு எவ்வளவு அழகானது என்று காட்டுகிறேன்..." என்று பாசத்துடன் அழைத்தது.

அதை கேட்ட புலி சிகரெட்டை காலில் போட்டு நசுக்கி விட்டு எலியுடன் நடந்தது... சிறிது தூரம் சென்றதும் ஒரு யானை உதட்டின் அடியில் 'ஹான்ஸ்' வைத்துக் கொண்டு நின்றது. அந்த யானையிடம் எலி, " சகோதரா நீ ஏன் இப்படி ஹான்ஸ், பான்பராக் எல்லாம் உபயோகித்து உன் வாழ்க்கையை சீரழிக்கிறாய்.. வா இந்த காடு எவ்வளவு சுந்தரமானது என்று காட்டுகிறேன்..." என்று அழைத்தது. உடனே அந்த யானையும் ஹான்ஸை எல்லாம் எடுத்து எறிந்து விட்டு எலியுடன் சென்றது....

கொஞ்ச தூரம் சென்றதும் சிங்க மகாராஜா சாராயம் குடித்துக் கொண்டு இருப்பதை எலி பார்த்தது. உடனே சிங்கத்திடம், "மகாராஜாவே, ஏன் இப்படி உங்களை நீங்களே அழித்துக் கொள்கிறீர்கள்... இந்த காட்டின் அழகினை மகாராஜா இதுவரை கண்டதுண்டா... என்னுடன் வாருங்கள் அடியேன் நான் காட்டுகிறேன்..." என்று சொல்லி முடித்ததும் எலியின் மண்டையில் நங் என்று ஒரு கொட்டு வைத்தது சிங்கம். எலி மயங்கி விழுந்தது.

உடனே சப்த நாடியும் ஒடுங்கிப் போன புலியும் யானையும், "மகாராஜாவே, தாங்கள் ஏன் இந்த நல்ல எண்ணம் கொண்ட எலியை அடித்தீர்கள்...?" என்று கேட்டன. அதற்கு சிங்கம், "இந்த பரதேசி கஞ்சா அடிச்சிட்டு இதையே தான் சொல்லி போன வாரம் என்னைய இந்த காடு பூராவும் நடக்க வெச்சான்... டெய்லி இவனுக்கு இதான் வேலையே...'' என்றபடி குடிக்கத் தொடங்கியது.

கடவுள் எப்போ டென்சன் ஆவார் தெரியுமா...?

கல்யாணம் பண்ணாமலே ஒரு பொண்ணு கர்ப்பம் ஆகிறதுண்டு. அதைக் கேட்டதும் அவங்க அம்மா 'அட கடவுளே, இப்படி பண்ணிட்டியே"ன்னு சொல்வாங்க பாருங்க... அப்பத்தான் டென்சன் ஆவாராம்!!


www.gyaanaguru.com



ஒரு கன்னியாஸ்திரி மருத்துவரை சந்திக்க வந்தார். தொடர்ந்து விக்கல் வந்துகொண்டே இருக்கிறது, என்னால் எந்த வேலையும் பார்க்க முடியவில்லை என்று விக்கலுடனே சொன்னார்.

கன்னியாஸ்திரியை பரிசோதித்த டாக்டர், ''நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள்...'' என்றதும் அந்த கன்னியாஸ்திரி அழுது கொண்டே வெளியே போய்விட்டார்.

கொஞ்சநேரத்தில் சர்ச்சில் இருந்து டாக்டருக்குப் போன் வந்தது. ''டாக்டர் சிஸ்டரிடம் என்ன சொன்னீர்கள்..?"

''அவர் விக்கலை நிறுத்துவதற்கு அதிரச்சி வைத்தியம் தரவேண்டும் என்பதால் அவர் கர்ப்பமாக இருக்கிறார் என்று சொன்னேன்... ஏன் என்னாச்சு..?"

"சீக்கிரமாக வாருங்கள். சர்ச் ஃபாதரை அந்த சிஸ்டர் அடித்ததில் அவர் மண்டை உடைந்துவிட்டது" என்றார்கள்.

ஒரு துறவியிடம், "ஞானம் வந்த பின் துறவியானீர்களா அல்லது துறவறம் வந்த பிறகு ஞானம் வந்ததா?" என்று ஒருவன் கேட்டான்.

அதற்கு அந்த துறவி, "ஞானம் வந்த பிறகே நான் துறவி ஆனேன்.." என்றான்.

"அதெப்படி துறவறம் பூண்டு கடினமாக சிந்தனை செய்தால் தானே ஞானம் கிடைக்கும்" என்று கேட்டான்.

''ஞானம் என்பது என் மனைவியின் பெயர்" என்றார் துறவி.

''பாஸ்போர்ட் சைஸ் போட்டோ எடுக்கணும்... ஆனா செருப்பு தெரியணும்... அப்படி உங்களால எடுக்க முடியுமா? 100 ரூபாய் தெரியணும்"

"எடுத்திடலாம்.... ரூபாயைக் குடு... செருப்பை கழட்டி தலையில வச்சிட்டு சேர்ல உட்காரு"


ஒரு குடிகார கணவன் தலைவலியுடன் காலையில் எழுந்தான். அப்பொழுது தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது, அதிகம் குடித்ததால் தன் மனைவியுடன் சண்டை போட்டதும், அதனால் அவன் மனைவி அவன் கிட்ட சண்டை போட்டு கொண்டு வீட்டை விட்டு வெளியே போனதும் நினைத்து மிகவும் வருத்தப்பட்டான். அதற்கு காரணம் பீர் பாட்டில் தான் என்று முடிவு எடுத்தான்!

வீட்டில் அவன் குடித்த காலி பீர் பாட்டில் கிரேட் இருந்தது. அதை வெளியே எடுத்து சென்று ஒவ்வொரு காலி பாட்டிலாக எடுத்து, "இனி நான் குடிக்க மாட்டேன்" என்று சொல்லி சுவற்றில் அடித்து உடைக்க ஆரம்பித்தான்.

ஒன்று, இரண்டு, மூன்று பாட்டில்களை உடைத்து விட்டான். நான்காவது பாட்டிலை எடுத்தான் உடைக்க முற்பட்ட நேரத்தில் தான் அது கொஞ்சம் வெயிட்டாக இருப்பதை உணர்ந்தான். அது, அவன் குடிக்காமல் விட்ட பீர் பாட்டில், ஒரு கணம் யோசித்தான்! அந்த ஃபுல் பீர் பாட்டிலிடம், '' என் மனைவியுடன் நேற்று நடந்த சண்டைக்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது எனக்குத் தெரியும். அதனால் நீ மட்டும் வீட்டுக்குள் போய் பத்திரமாக இரு" என்று சொல்லி அந்த பாட்டிலுடன் வீட்டுக்கு வந்துவிட்டான்.







# வார்த்தைகளே வரம்

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து வருகிறது. அனுபவம் மோசமான முடிவுகளிலிருந்து வருகிறது

**ரீட்டா மே பிரவுன்**

பணத்தால் வாங்க முடியாத ஒன்று இருக்கும் வரை, யாரும் பணக்காரர் அல்ல...!!

**ஜனனி**

துணிவு என்பது அச்சமற்ற நிலையல்ல; அச்சத்தை எப்படி எதிர்நோக்க வேண்டும், என்று புரிந்துகொள்ளும் நிலை.

**மேடம் கியூரி**

இறப்பு என்ற பயத்திலிருந்து தோன்றிய கற்பனைக் குழந்தையே கடவுள்...

**சிக்மண்ட் பிராய்ட்**

அற்புதங்களின் ரகசியமே அது நடக்கும்போது நம்மால் உணரமுடியாமல் இருப்பது தான்.

**சவிதா**

சொல்லப்பட்டவுடன் ஒரு வார்த்தை இறந்துவிடுகிறது என்கிறார்கள். அது அன்றிலிருந்துதான் வாழத்தொடங்குகிறது.

**எமிலி டிக்கின்சன்**

நதிதான் கழுவிச் செல்கின்றது..!! மறந்துவிடாதீர்கள் நதிதான் சுமந்து வருகின்றது....!!

**கதிர்**

ஆண்கள் மாறிவிடுவார்கள் என்று நம்பி பெண்கள் ஆண்களைத் திருமணம் செய்கிறார்கள். பெண்கள் மாறமாட்டார்கள் என்று நம்பி ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்கிறார்கள்.

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

உற்சாகமும் மகிழ்ச்சியும் தான் இளமை. அது எப்போது குறைகிறதோ அப்போதே வயதேறத் தொடங்குகிறது.

**கார்த்திக்**

உதிரத்தானே போகிறோம் என்று நினைத்தால், அவ்வளவு அழகாய் நிகழாது மலர்தல்.

**ஹேமாராஜ்**



www.gyaanaguru.com

Online
# கவுன்சிலிங்

WhatsApp Call Only



Talk Therapy

கணவன்,
மனைவி,
குழந்தைகள்
உறவுச்
சிக்கல்களுக்குத்
தீர்வு

மனவள ஆலோசகர்
**எஸ்.கே.முருகன்**
ஞானகுரு
கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு :
+91 80725 89355